## சென்னை மியாட் மருத்துவமனையில்

# கல்லீரலை பாதுகாக்க 'லிவர் ஜிம்' தொடக்கம்

## 350 பேருக்கு இலவச மருத்துவப் பரிசோதனைகள்

■ சென்னை

சென்னை மணப்பாக்கம் மியாட் மருத்துவமனையில் கல்லீரலை பாதுகாப்பதற்காக 'மியாட் கல்லீரல் (லிவர்) ஜிம்' தொடக்க விழா நேற்று நடந்தது.

மருத்துவமனை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் தலைமை தாங்கினார். கல்லீரல் துறை இயக்குநர் டாக்டர் சுரேந்தரன் முன்னிலை வகித்தார். மருத்துவமனைத் தலைவர் டாக்டர் மல்லிகா மோகன்தாஸ் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு, மியாட் கல்லீரல் ஜிம்மை தொடங்கி வைத்தார்.



▲ சென்னை, மணப்பாக்கம் மியாட் மருத்துவமனையில் கல்லீரலை பாதுகாப்பதற்காக தொடங்கப்பட்டுள்ள 'மியாட் கல்லீரல் ஜிம்' தொடக்கவிழாவில் மருத்துவமனை தலைவர் டாக்டர் மல்லிகா மோகன்தாஸ், நிர்வாக இயக்குநர் டாக்டர் பிரித்வி மோகன்தாஸ், கல்லீரல் துறைத் தலைவர் டாக்டர் சுரேந்தரன் உள்ளிட்டோர்.

கல்லீரல் பாதிப்பு, அதை தடுக்கும் வழிகள், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை பற்றி டாக்டர்கள் பேசினர். கல்லீரல் ஜிம் தொடங்கப்பட்ட முதல் நாளிலேயே 350-க்கும் மேற்பட்டோருக்கு ரூ.6 ஆயிரம் மதிப்புள்ள கல்லீரல் பரிசோதனைகள் இலவசமாக செய்யப்பட்டன.

விழாவில் மியாட் மருத்துவ மனை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் பேசிய தாவது:

உடல் உழைப்பு இல்லாதது, மது, கொழுப்பு உணவுகள் அதிகரிப்பு ஆகியவற்றால்தான் கல்லீரல் பாதிப்பு, கல்லீரல் நோய்கள் அதிகரிக்கின்றன. மது, உடல் பருமன், சர்க்கரை நோய், ஹெபடைடிஸ் பி, சி போன்றவை கல்லீரல் பாதிப்புக்கு முக்கிய காரணங்கள். இளம் வயதினர் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

கல்லீரல் 90 சதவீதம் சேதமடைந்த பிறகுகூட, வெளியே அறிகுறிகள் தெரியாது. முழுவதுமாக பாதிக்கப்பட்ட பிறகு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே உயிரைக் காப்பாற்ற ஒரே வழி. கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.30 லட்சம் முதல் ரூ.35 லட்சம் வரை செலவாகிறது. எல்லோராலும் இதை செய்துகொள்ள முடியாது.

எனவே, கல்லீரலை பாதுகாக்கும் நோக்கில் 'மியாட் கல்லீரல் ஜிம்' தொடங்கப்பட்டுள்ளது. கல்லீரல் பாதிப்புக்கான ஆரம்ப நிலையில் இருப்பவர்களுக்கும், கல்லீரல் பாதிப்பு இல்லாதவர்களுக்கும் கல்லீரலை பாதுகாக்கும் வழிமுறைகள், சாப்பிடக்கூடிய உணவுகள், செய்யவேண்டிய உடற்பயிற்சிகள் உட்பட அனைத்து விதமான ஆலோசனைகளும் டாக்டர்கள் மூலம் வழங்கப்படும். தேவையானவர்களுக்கு பரிசோதனைகளும் செய்யப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மியாட் மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்கள் அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர்.